# ஐக்கிய மக்கள் கூட்டணியின் மலையக சாசனம்
## (மலையக விஞ்ஞாபனம்)

# සමගි ජන සන්ධානයේ මලෛයහ ප්‍රඥප්තිය
## (මලෛයහ ප්‍රතිපත්ති ප්‍රකාශනය)

தமிழ் முற்போக்கு கூட்டணி - இலங்கை
දමිළ ප්‍රගතිශීලී සංධානය - ශ්‍රීලංකාව
Tamil Progressive Alliance - SriLanka

**ஐக்கிய மக்கள் சக்தி/கூட்டணி தலைவர் திரு. சஜித் பிரேமதாச அவர்களுக்கும், தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் (TPA) இடையில் கையெழுத்திட்டு உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த (MoU) ஆவணத்தின் அடிப்படையிலான மலையக சாசனம் (மலையக விஞ்ஞாபனம்)**

**ஐக்கிய மக்கள் சக்தி (SJB), ஜனநாயக மக்கள் முன்னணி (DPF), தொழிலாளர் தேசிய முன்னணி (WNF) மற்றும் மலையக மக்கள் முன்னணி (UPF) ஆகிய அமைப்புகளுக்கு இடையே ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற பரந்த அரசியல் ஏற்பாட்டிற்குள் 2024 ஆகஸ்ட் 11 ஆம் தேதி கொழும்பில் முறையான புரிந்துணர்வின் அடிப்படையில் சம்பந்தபட்ட அமைப்புகளின் தலைவர்களினால் கையெழுத்து இட்டு ஏற்படுத்தப்பட்ட எழுத்து மூல வெளிப்பாடு இதுவாகும்.**

# ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் மலையக சாசனம் (மலையக விஞ்ஞாபனம்)

## முன்னுரை

1. மலையகத் தமிழ் பெண்களும், ஆண்களும் இரண்டு நூற்றாண்டுகளாக இலங்கையின் பொருளாதாரம் மற்றும் பொது நல்வாழ்வுக்கு ஆற்றிய மகத்தான பங்களிப்பை உறுதிப்படுத்துதல்;

2. ஒரு தனித்துவமான அடையாளத்துடன் கூடிய ஒரு சமூகமாக முழு அளவிலான உரிமைகள் மற்றும் கண்ணியம் ஆகியவற்றை அனுபவித்து சம பிரஜைகளாகக் கருதப்படுவதற்கான அவர்களின் உரிமையையும், பரந்து பட்ட இலங்கையர் அடையாளத்திற்கு பங்களிப்பு செய்தலையும் அங்கீகரித்தல்;

3. சுதந்திரத்திற்குப் பிந்தைய கணிசமான காலத்திற்கு இந்த சமூகம் அதன் குடியுரிமை, வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவற்றை இழந்துள்ளதையும் மற்றும் இவற்றின் விளைவாக ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது பெரும்பாலான சமூக-பொருளாதார மற்றும் மனித வளர்ச்சி சுட்டிகளில் பின்தங்கியுள்ளது என்பதனையும் ஏற்றுக்கொள்ளுதல்;

4. மலையக தமிழ் சமூகத்தின் சமூக-பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் எந்தவொரு முன்னேற்றமும் ஒட்டுமொத்த இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் மனித அபிவிருத்திக்கு சாதகமான மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்பதையும் அங்கீகரித்தல்;

## வழிகாட்டி கோட்பாடுகள்

1. இலங்கையின் அரசியல், நிர்வாக, பொருளாதார மற்றும் சமூக பிரதான நீரோட்டத்தில் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியாக இருக்க வேண்டும் என்ற இந்த சமூகத்தின் அபிலாசைகளை வரவேற்று ஆதரவளித்தல்

2. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சிதறியும், நுவரெலியா மாவட்டத்தில் செறிவாகவும், மலையக சமூகம் வாழ்வதையும் கருத்தில் கொள்ளுதல்

2. புதிய வாய்ப்புகளைத் தேடும் இளைஞர்களின் கணிசமான பிரிவினருடன், மலையக சமூகம் மாற்றம் அடைகிறது என்பதை கவனத்தில் கொள்ளுதல்

4. அர்த்தமுள்ள ஒருங்கிணைப்பை அங்கீகரிக்கும் நோக்கில்,

    அ. நன்கு வரையறுக்கப்பட்ட விசேட சாதக நடவடிக்கை,குறைதீர் ஏற்பாடுகள் (Affirmative Action) உள்ளடங்களாக, இலக்கை நோக்கிய நடவடிக்கைகள் முன்னெடுக்க பட வேண்டும்

    ஆ. மலையக தமிழ் சமூகத்தின் காணி உரிமை பிரச்சினை தீர்க்க பட வேண்டும்

    இ. தோட்ட நிறுவனங்களை சார்ந்திராமல், அரசாங்க சேவைகளை சமமாக பெற்றுக்கொள்ள மலையக சமூகத்திற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்

ஈ. கல்வி மற்றும் தொழில் திறன்களில் முதலீடு செய்தல் வேண்டும்

***இதன் மூலம் நாம், பின்வருவனவற்றுக்கு உடன் படுகிறோம்***

**(அ) கல்வி மற்றும் தொழில் பயிற்சி மூலம் மலையக இளைஞர்களை எதிர்காலத்திற்காக தயார் செய்வதன் மூலம் ஒரு விரைவான முன்னேற்றம்**

1. மலையக சமூகத்தின் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை கல்வி மட்டம், தேசிய சராசரிக்கு இணையாக கொண்டு வரப்பட வேண்டி, ஒரு விசேட சாதக செயல் திட்டத்தை (Affirmative Action) உருவாக்குதல். இது, அரசாங்க கொள்கை, மேலும் பலதரப்பு உதவிகள் உள்ளடங்கலாக, இந்தத் துறையில் மேற்கொண்ட முந்தைய தலையீடுகள் மூலம் பெற்ற அனுபவ அடிப்படையிலான செயல் திட்டங்கள் மூலம் அடையப் பட வேண்டும்.

2. நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, குருநாகல் மற்றும் கொழும்பு மாவட்டத்தின் அவிசாவளை கல்வி வலயம், ஆகிய இடங்களில் மொத்தம் 25 பாடசாலைகளை தெரிவு செய்து தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தி, அங்கு விஞ்ஞானம், கணிதம் மற்றும் தொழில்நுட்பப் பாட பிரிவுகளை மேம்பட செய்தல்.

3. தொடர்பு பட்ட அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற தீர்மானங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பெருந்தோட்ட பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் முகமாக தோட்டப் பிரதேசங்களிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் விளையாட்டு மைதானங்கள் உட்பட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். அனைத்து தோட்டப் பள்ளிகளுக்கும், விளையாட்டு மைதானம் உட்பட தேவையான அவசியமான காணிகள் குறித்து உடனடியாக கணக்கெடுப்பு மேற்கொண்டு எல்லைகளை அடையாளப்படுத்தி அவற்றுக்கான உறுதிப்பத்திரங்களை வழங்குதல்.

4. மலையக, தமிழ் சமூகத்தினரின் சிறப்புத் தேவைகளுக்காக தமிழ் மொழியில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம், கணிதம் (STEM) ஆகிய பாடங்களை போதிக்கும் ஆசிரியர்களை பயிற்றுவிக்க முழு அளவிலான கல்வியியல் கல்லூரியை ஸ்தாபித்தல். தேவையான தகுதியைக் கொண்டுள்ள பொருத்தமானவர்களைக் கொண்டு தோட்டப்பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப அர்ப்பணிப்புடன் செயற்படுதல். தேவைப்படின், தற்காலிக ஏற்பாடாக வெளியில் இருந்து பொருத்தமானவர்களை தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புதல்.

5. பெருந்தோட்டப் பகுதிகளில் பாலர் வகுப்பு கல்வியை முறைப்படுத்தவும் ஆதரவளிக்கவும் நடவடிக்கை எடுப்பதுடன் முன்பள்ளி மற்றும் ஆரம்ப மட்ட பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டங்களின் ஊடாக போசாக்களித்தல்.

6. யுனெஸ்கோ வழிகாட்டுதலின்படி பெருந்தோட்ட பகுதி தமிழ்ப் பிள்ளைகள் தங்கள் தாய் மொழியில் கற்பதற்கு அருகாமையில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் அனுமதி பெறுவதனை உறுதி செய்தல். இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களின் நிலைமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தல்.

7. தேவைப்பாடுள்ள குழந்தைகளுக்கான விடுதி வசதிகளுடன் கூடிய குடியிருப்புப் பாடசாலைகளை உருவாக்கி, தேவையான இடங்களில் நிறுவுதல்.

8. தொலைதூர பெருந்தோட்ட பாடசாலைகளில் ஆசிரியர் குடியிருப்புகளுக்கான சிறப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

9. பெருந்தோட்டப் பகுதிகளில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச தொழில்நுட்ப சேவை வழங்குநர்களுடன் இணைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப மையங்கள் மற்றும் புதிய முயற்சிகளுக்கான ஆதரவு மையங்களை (Incubation Centers) உருவாக்க இருதரப்பு மற்றும் பலதரப்பு நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை உறுதி செய்தல்.

10. இலங்கை ஹைலண்ட் பல்கலைக்கழகம் (மலையக பல்கலைக்கழகம்) என்ற முன்மொழியப்பட்ட பெயருடன், முழு அளவிலான பல்கலைக்கழகத்திற்கான முதற் படியாக, ஏற்கனவே உள்ள பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஒரு வளாகத்தை ஹட்டனில் நிறுவ நடவடிக்கை எடுத்தல். முன்மொழியப்பட்ட நிறுவனம் தொடக்கத்தில் நவீன மற்றும் ஏற்றுமதி விவசாயம், உணவு விஞ்ஞானம், கால்நடை அபிவிருத்தி, பெருந்தோட்ட ஆய்வுகள், தகவல் தொழில்நுட்பம், நில அளவை ஆய்வு (QS), கல்வி, மொழிகள், மலையகக் கலை மற்றும் கலாச்சார ஆய்வுகள், சுற்றுலா, விருந்தோம்பல் முகாமை, வணிக முகாமை, நிதி முகாமை, இயற்கை வள முகாமை, சுற்றுச்சூழல் அறிவியல், மனிதவியல் மற்றும் சமூக அறிவியல் துறைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து பட்டப்படிப்புகளை ஆரம்பித்தல்.

11. மலையக இளைஞர்களின் தொழில் பயிற்சிக்கு அர்ப்பணிப்புள்ள பயிற்சி நிறுவனங்களை அமைப்பதன் மூலம் தமிழ் மொழி மூலம் தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அவசியமான கற்கைநெறிகளை அறிமுகம் செய்தல். மலையக இளைஞர்களை உள்வாங்குவதற்கான நுழைவு அளவுகோல்களை உறுதிசெய்து, கல்வியை பூர்த்தி செய்து முடிக்கும் வரை மாணவர்களுக்கு மானியம் மற்றும் உதவித்தொகையை வழங்குதல்.

12. விசேட தாதியர் பயிற்சி நிலையமொன்றை அமைத்து மலையக இளம் யுவதிகளை பராமரிப்புப் பணியில் (Care giving) நிபுணத்துவம் உள்ளவர்களாக பயிற்று வித்தல்.

13. தொழில் வழிகாட்டுதல் மூலம் மலையக இளைஞர்களின் தொழில் முனைவோருக்கு ஆதரவு, தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க நிதி உதவி, பெருந்தோட்ட நிர்வாகத்தின் அனுமதி அவசியமற்ற வணிகப் பதிவு மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான ஆதரவினை வழங்குதல்.

**(ஆ) சுகாதாரம், போசாக்கு மற்றும் நலவுரிமை**

1. ஏற்கனவே உள்ள அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக தோட்ட நிர்வாகத்தால் நடத்தப்படும் தோட்டத் துறையில் உள்ள அனைத்து சுகாதார வசதிகள்/நிறுவனங்களையும் மாகாண மற்றும் தேசிய சுகாதார கட்டமைப்புடன் ஒருங்கிணைத்தல்.

2. ஏனைய குடிமக்களுக்கு இணையாக மலையக சமூகத்தில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சுகாதார பாதுகாப்பில் சமத்துவத்தை உறுதி செய்வதற்காக தகுதியான வைத்திய நிபுணர்களை நியமித்தல்.

3. குழந்தைகளிடையே வளர்ச்சி குன்றிய நிலை, இனப்பெருக்க வயதுடைய பெண்களிடையே ஏற்படும் இரத்த சோகை மற்றும் தேசிய சராசரியை விட மோசமாக இருக்கும் தாய் சேய் இறப்பு வீதம் போன்ற பிற முக்கியமான சுகாதார குறிகாட்டிகளை நிவர்த்தி செய்ய ஊட்டச்சத்து குறைநிரப்பி உள்ளிட்ட இலக்குகளை கொண்ட திட்டத்தை செயல் படுத்தல்.

4. பெருந்தோட்டப் பகுதிகளில், பொது சுகாதார கண்காணிப்புச் சேவைகளை ( PHI ) விரிவு படுத்துவதன் ஊடாகவும், அதிக மக்கள் தொகை கொண்ட தோட்ட பகுதிகளில் புதிய பொது சுகாதாரப் கண்காணிப்பாளர் சேவை வலயங்களை நிறுவுவதன் மூலமும் பொதுச் சுகாதார சேவைகளை மேம்படச்செய்தல்.

5. இந்த சமூகத்தில் காணப்படும் வறுமை நிலைமை மற்றும் பிற குறை வளர்ச்சிக் குறியீடுகள் ஆகியவற்றை கணக்கில் எடுத்து அஸ்வெசும போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் முன்னுரிமை அளித்தல்.

**(இ) தோட்டங்களில் வாழ்வாதார காணி உரிமை மற்றும் வேலை வாய்ப்பு**

1. தோட்டத் தொழிலாளர்களை சிறு தோட்ட விவசாயிகளாக மாற்றுவதற்கான விரிவான அரசாங்கக் கொள்கையை அறிமுகப்படுத்தி, நடைமுறைப்படுத்தி, தேயிலை கைத்தொழிலை பாதுகாத்தல். இந்த நோக்கத்துக்காக நுவரெலியா மற்றும் பிற மாவட்டங்களில் நிலப் பயன்பாட்டு முறைகளில் உள்ள வேறுபாடுகள் மற்றும் பல்வேறு தோட்டப் பகுதிகளின் களமட்ட நிலைமைகளை கருத்தில் கொள்ளல்.

2. சிறு தோட்ட உரிமையாளர் என்ற கொள்கையை நடைமுறை படுத்தும் தேசிய செயல் திட்டத்தை தொடர்புற்ற பங்குதாரர்களால் முன்வைக்கப்படும் பல்வேறு மாற்று யோசனைகளை பரிசீலனை செய்து, வெவ்வேறு மாவட்டங்களில் செயல்படுத்துவதற்கான வழிவகைகளை உள்ளடக்கி உருவாக்கல்.

3. தோட்டத்துறை கூட்டுறவு திணைக்களத்தை இதற்கென விசேடமாக நிறுவி, தொழிலாளர்கள் சிறு தோட்ட விவசாயிகளாக மாறும் சந்தர்ப்பத்தில் அவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர் அதிகாரசபையில் அல்லது தோட்டத்துறை கூட்டுறவு திணைக்களத்தில் இணைந்து செயற்படுவதற்கான வழி செய்தல்.

4. தொழிலாளர்கள் சிறு தோட்ட உரிமையாளர்களாக ஆக்கப்படுகின்ற இந்த நிலைமாறு காலத்தில், அரசாங்கத்தின் தீவிர ஈடுபாடு மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் இடையேயான ஒப்பந்தங்கள் மூலம், தொழிலாளர்களுக்கு வாழ்வதற்கேற்ற ஊதியம் (Living wage) பெறுவதனை உறுதி செய்தல்.

5. தேயிலை பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு, ஒருங்கிணைக்கப்பட்ட வீட்டு தோட்ட அபிவிருத்தி (Homestead Development) மற்றும் பிற தொழில் முனைவோர் நடவடிக்கைளுக்கு முன்னுரிமை அளிக்கும் வாழ்வாதார நோக்கங்களுக்காக அவ்வந்த தோட்டங்களில் அரசாங்கத்திற்கு சொந்தமான கைவிடப்பட்ட மற்றும் பயிரிடப்படாத காணிகளை மீளபெற்று, தோட்டங்களில் வசிப்பவர்களுக்கு பகிர்ந்தளித்தல்.

6. தேசிய உணவு பாதுகாப்பிற்கு பங்களித்து வரும் தோட்டங்களில் குடியிருப்பவர்களால் ஏற்கனவே நீண்ட காலமாக பயிரிட பட்டு வரும் காணிகளுக்கு பாதுகாப்பான காணி உறுதிகளை நெறிப்படுத்தி வழங்குதல்

7. மலையகத் தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருக்கும் பொது அரச துறை மற்றும் அரை-அரச நிறுவனங்களுக்கு (Semi Government) ஆட்சேர்ப்பு செய்யும் போது மக்கள் தொகைக்கு ஏற்றவாறு மலையக சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு முன்னுரிமை அளித்தல். இது வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும் ஒரு காலக்கெடுவுக்கு உட்பட்ட சாதகமானதும், உறுதியானதுமான குறைதீர் ஏற்பாட்டின் (Affirmative Action) மூலம் செய்யப்பட வேண்டும். இந்த திட்டத்தில் மலையக, இளைஞர்கள் வேலை வாய்ப்புகளில் நுழைவதற்கு ஏற்ற சிறப்பு அளவுகோல்கள் இருக்க வேண்டும்.

8. தனியார் தோட்டங்கள் உட்பட தோட்டப் பகுதிகளில் தொழிலாளர் சட்டங்கள் மற்றும் பிற சட்டங்கள் மற்றும் வேலை வாய்ப்பு விதிமுறைகளை கடைப்பிடிப்பதை மேற்பார்வை செய்வதை வலுப்படுத்த தொழில் திணைக்களத்தினால் ஒரு சிறப்பு வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதுடன் தோட்டப் பகுதிகளில் தமிழ் பேசும் தொழில் திணைக்கள பரிசோதகர்களை நியமிக்க ஏற்பாடு செய்தல்.

**(ஈ) குடியிருப்பு காணி உரிமை மற்றும் புதிய கிராமங்கள்**

1. தோட்டங்களில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் வீட்டை அமைக்க காணி உரிமை வழங்கப்படுவதை உறுதிசெய்யத் தேவையான சட்டரீதியான மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை எடுத்தல். காணிகள் கலந்துரையாடல் முறையில் தெரிவு செய்ய பட்டு, புவியியல் ரீதியாக அண்மைய போக்குவரத்து வீதியை எளிதில் அணுகக்கூடியதாக அமைய வேண்டும். தாம் வசிக்கும் இடத்திலேயே வசிப்பது அல்லது வீடமைக்க புதிய காணியை பெறுவது தொடர்பில் தீர்மானிக்கும் உரிமை குடும்பங்களுக்கு வழங்க வேண்டும். பெருந்தோட்ட குடும்பங்களுக்கு இவ்வாறு வழங்கப்படும் காணியின் அளவு, அதே பிரதேச செயலக பகுதியில் உள்ள ஏனைய குடும்பங்களுக்கு வழங்கப்படும் காணி உரிமை அளவுகளுக்கு சமமானதாக இருக்க வேண்டும். நாட்டின் பிற பகுதிகளில் உள்ள கிராம மக்களுக்கு வழங்க படும் அதே சட்டபூர்வ அந்தஸ்துடன் காணி உறுதிகள் இருக்க வேண்டும். ஒரு குடும்பம்/வீட்டில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவருக்கும் கூட்டு உரிமை வழங்கப்பட வேண்டும். திருமணமான ஒவ்வொரு தம்பதியினரும் ஒரு குடும்பமாக கருதப்படுவர். ஒவ்வொரு குடும்பமும் வீட்டு மனைக்காக காணியை பெற உரிமை உடையவர் ஆவர்.

2. இந்த காணிகளில் தமது சொந்த நிதியை பயன்படுத்தி வீடுகளை நிர்மாணிக்க விரும்புபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நிர்வாக உதவிகளை வழங்குதல்.

3. வீடமைக்க நிதியுதவி தேவைப்படும் வறிய மலையக குடும்பங்களுக்கு அரசாங்க நிதியுதவி வீட்டுத் திட்டங்களில் இடமளித்தல். மலையகத் தமிழ் சமூகத்திற்கு வீடுகள் மற்றும் உட்கட்டமைப்புகளை நிர்மாணிக்க இருதரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்தி (சர்வதேச) உதவிகளை அரசாங்கம் தீவிரமாக பெற வேண்டும்.

4. கடந்த மூன்று தசாப்தங்களில் பல்வேறு அரசாங்க திட்டங்களின் கீழ் ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளுக்கான உரிமை பத்திரங்களை முறைப்படுத்தி வழங்குதல்.

5. குடிநீர் வழங்கள் மற்றும் மலசலகூட வசதிகள் தொடர்பில், தேசிய சராசரிக்கு ஏற்ப நிலைமையை தோட்ட சமூகத்தினரிடையே கொண்டு வருவதை இலக்காக கொண்டு, இது தொடர்பில் அரசால் இயக்கப்படும் விசேட திட்டங்களைச் செயல்படுத்துதல்.

6. பெருந்தோட்ட மனித குடியிருப்புகளை தேவையான பௌதீக மற்றும் சமூக வசதிகளுடன் கூடிய புதிய கிராமங்களாக உருவாக்குதல். தோட்டங்களில் ஊர் (Township) மற்றும் புதிய கிராமங்களை உருவாக்குவதில் அதன் ஆணையை நிறைவேற்றுவதற்கு, புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையை (NEVIDA) வலுப்படுத்தி, போதுமான நிதியையும் வரவு செலவுத்திட்டம் மூலமாக வழங்குதல்.

**உ. மாகாணங்களில் இருந்து நகரங்களுக்கு இடம்பெயரும் தமிழ் மக்களுக்கான ஆதரவுக் கட்டமைப்பு**

1. காத்திரமான சமூக வள மையங்களை நகரங்களில் நிறுவி, அவற்றில் குறைந்த வருமான மட்டங்களில் தேங்கியுள்ள இடம்-பெயர் மலையக இளைஞர்களுக்கு தொழில்முறை வழிகாட்டுதல், தொழில் பயிற்சி, தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் மென் திறன்கள் பயிற்சி, கலாச்சார மேம்பாடு மற்றும் சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

2. கஷ்டமான வாழ்விடங்கள் மற்றும் வாடகை வீடுகளில் குடியேறி வசிக்கும் இந்த இடம்-பெயர் குடும்பங்களை, நகர்ப்புற குறை வருமான மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் உட்பட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் ஒருங்கிணைத்து, அவர்களை தற்போதைய துன்புறு நிலைமைகளில் இருந்து மேம்படச்செய்தல்.

3. வீட்டுப்பணியாளர் பாதுகாப்பு மற்றும் பணியிட துன்புறுத்தல் தொடர்பான சர்வதேச தொழில் அமைப்பின் (ILO) நியமங்களை ஏற்றுறுதி செய்தலும், இந்த துறையில் உள்ள ஆயிரக்கணக்கான முறைசாரா தொழிலாளர்களைப் பாதுகாத்தலும், வீட்டு பணி தொழில் துறையை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை இயற்றுதலும்.

4. இக்குடும்பங்களின் குழந்தைகளுக்கு கல்வி வழங்கும் நகர்ப்புற தமிழ் மொழி மூல பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் மனித வளத் தேவைகளை பூர்த்தி செய்தல்.

5. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் உட்பட நகர்ப்புற மையங்களில் நிரந்தரமாக வசிப்பவர்கள் எதிர்கொள்ளும் முறையான வாக்காளர் பதிவு செயல்பாட்டில் உள்ள நிர்வாக சிக்கல்களை நிவர்த்தி செய்தல்.

**(ஊ) மலையகத் தமிழர்களை பொது அரச நிர்வாகம் மற்றும் தேசிய நீரோட்டத்தின் கீழ் கொண்டு வருதல்**

1. புதிய எல்லை நிர்ணயம் மூலம் பெருந்தோட்ட பிரதேசங்களில் கிராம சேவையாளர் (GN) மற்றும் பிரதேச செயலக (DS) பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல். மலைநாட்டின் போக்குவரத்து சிரமம் மற்றும் நிலப்பரப்பின் தரைத்தோற்றக் காரணங்களினால், பிரிவுகளின் எல்லை நிர்ணய அடிப்படை வரம்புகள், தேசிய சராசரி வரம்புகளுக்கு குறைவான மக்கள் தொகை மற்றும் புவியியல் எல்லைகளை கொண்டதாக இருக்க செய்தல்.

2. நுவரெலியா மாவட்டத்தில், ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டுள்ள புதிய பிரதேச செயலக அலுவலகங்கள் முழுமையாக இயங்குவதற்கு போதிய வளங்களை ஒதுக்கீடு செய்தல்.

3. நாட்டின் கிராம சேவையக, பிரதேச செயலக மற்றும் மாவட்ட செயலக மட்ட அரச நிறுவனங்களின் பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தினால் வழங்க படுகின்ற நலன்புரி சேவைகளை பெறுகின்ற சமமான வாய்ப்புகளை பெருந்தோட்ட வாசிகளுக்கும் அளிப்பதன் மூலம், தோட்ட நிர்வாகங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் என்ற நிலையில் இருந்து, நாட்டின் முழுமையான குடிமக்களாக அவரகளை மாற்றல்.

4. தோட்டங்களில் உள்ள வீதி கட்டமைப்பை உள்ளூராட்சி, மாகாண மற்றும் மத்திய அரசாங்க அமைச்சகத்தின் ஆளுகைகளின் கீழ் கொண்டு வந்து, அவற்றை வழமையான பராமரிப்பு மற்றும் மேம்பாடுகளுக்காக அரச கட்டமைப்பில் ஒருங்கிணைத்தல்.

**(எ) மலையகத் தமிழர்களை ஆட்சியில் பங்குதாரர்களாக்குதல்**

1. இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் சிதறி பரந்தும், நுவரெலியா மாவட்டத்தில் செறிவாகவும் வாழும் மலையகத் தமிழ் சமூகத்திற்கு, மத்தியிலும், பிராந்தியங்களிலும், அதிகாரப் பகிர்வை உறுதி செய்தல். இது தேசிய மட்டத்தில் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் மற்றும் மாகாண மட்டங்களில் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட உள்ளூராட்சி மட்ட அதிகாரப் பகிர்வு ஆகியவற்றைக் குறிக்கும்.

2. மலையகத் தமிழ் சமூகத்தின், பரந்து வாழும் ஜனத்தொகை அமைவை கருத்தில் கொண்டு அரசியலமைப்பு சீர்திருத்த செயல்பாட்டில், ஒரு ஆளுகை அமைப்பாக நிலவரம்பற்ற சமூக சபை (Non-Territorial Community Council - NTCC) என்ற நிறுவனத்தை உருவாக்குதல். பரந்து வாழுகின்ற இந்த சமூகத்தின் நலன்களைக் கவனிக்கும் ஆணையை இந்த நிறுவனம் பெற்றிருக்கும். பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகளில் மலையக வம்சாவளியை சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பிரதிநிதித்துவம் இல்லாத பிரதேசங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட மலையக வம்சாவளி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந்த சபையில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் விதி முறைகளில், மலையகத் தமிழ் சமூகத்தின் கலாச்சார, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்த கூடியவற்றை கண்காணித்தல், ஆய்வு செய்தல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடுவதற்கான ஆலோசனை மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் இந்த நிறுவனத்திற்கு இருக்க வேண்டும்.

3. புதிய எல்லை நிர்ணயம் மூலம் பெருந்தோட்ட பகுதிகளில் பிரதேச சபைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். மலைநாட்டின் போக்குவரத்து சிரமம் மற்றும் நிலப்பரப்பின் தரைத்தோற்றக் காரணங்களை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பிரதேச சபை (PS) பிரிவினதும் நிலப்பரப்பின் எல்லை நிர்ணய அடிப்படை வரம்புகள், தேசிய சராசரி வரம்புகளுக்கு குறைவான மக்கள் தொகை மற்றும் புவியியல் எல்லைகளை கொண்டதாக இருக்க செய்தல்.

4. பெருந்தோட்ட பிரதேசங்களில் தேர்ந்தெடுக்க பட்ட பிரதேச சபைகளை நகர சபைகளாகவும், நகர சபைகளை மாநகர சபைகளாகவும் தரம் உயர்த்தல்.

5. அரசியலமைப்பு சட்டமான மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல். தமிழ் பேசும் பணியாளர்கள் மற்றும் மொழி பெயர்ப்பாளர்களை நியமிப்பதன் மூலம் இச்சமூகம் அரச அதிகாரிகளுடன் தமிழில் தொடர்பாட முடியும் என்பதை உறுதிப்படுத்தல். இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் அத்தியாயம் 4 இன் கீழ் தேவைப்படும் இரு மொழி பிரதேச செயலக பிரிவுகளில் இந்த நடவடிக்கைகளை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தல்.

6. பாராளுமன்ற, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில், விகிதாசார தேர்தல் முறையை பேணுதல். மலையகத் தமிழ் சமூகத்தின் சனத்தொகை வீதத்திற்கேற்ப அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் எல்லை நிர்ணய செயல் முறையை நடைமுறை படுத்தல்.

7. அரசியலமைப்புச் சபை, சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் அத்தகைய பொறிமுறைகள் உட்பட தேசிய அமைப்புகளில் மலையகத் தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துதல்.

8. மலையக சமூகத்தின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை (NEVIDA) போன்ற அமைப்புகளுக்கு போதுமான வள வசதிகளை வழங்குதல்.

**கையொப்பங்கள்**

**கௌரவ. சஜித் பிரேமதாச பா.உ**
தலைவர் ஐ.ம.க & ஐ.ம.கூ
எதிர்க்கட்சித்தலைவர்
இலங்கைப் பாராளுமன்றம்

**கௌரவ. மனோ கணேசன் பா.உ**
தலைவர் – த.மு.கூ (TPA)
தலைவர் – ஜ.ம.மு (DPF)

**கௌரவ. பி.திகாம்பரம் பா.உ**
தலைவர் – தொ.தே.மு (WNF)
பிரதி தலைவர் – த.மு.கூ (TPA)

**கௌரவ. வி.ராதாகிருஷ்ணன் பா.உ**
தலைவர் – ம. ம. மு. (UPF)
பிரதி தலைவர் – த.மு.கூ (TPA)

**கௌரவ. எம்.உதயகுமார் பா.உ**
உப தலைவர் – தொ.தே.மு (WNF)

**ගරු සජිත් ප්‍රේමදාස මැතිතුමා විසින් නායකත්වය දරන සමගි ජන සන්ධාන රජයක, වතුකරයේ ජනතාව කෙරෙහි විශේෂ අවධානයක් යොමුකරමින්, මලෙයහ දෙමළ ශ්‍රී ලාංකික ප්‍රජාව මුහුණදෙන අභියෝග පිළිගැනීමට සහ ආමන්ත්‍රණය කිරීම උදෙසා, සමගි ජන බලවේගය (SJB) සහ ප්‍රජාතන්ත්‍රවාදී ජනතා පෙරමුණ (DPF), කම්කරු ජාතික පෙරමුණ (WNF) සහ කඳුරට ජනතා පෙරමුණ (UPF) සංවිධානයන්ගෙන් සමන්විතවන දෙමළ ප්‍රගතිශීලී සන්ධානය (TPA) ලෙස පිහිටුවා ඇති සහ එනමින් මින් ඉදිරියට හැඳින්වෙන, සමගි ජන සන්ධානයේ (SJS) පුළුල් දේශපාලන සැකැස්ම තුළ, 2024 අගෝස්තු 11 වැනි දින කොළඹ දී ඇතිකරගත් විධිමත් අවබෝධතාවෙහි ලිඛිත ප්‍රකාශය මෙයයි.**

# සමගි ජන සන්ධානයේ මලෙයහ ප්‍රඥප්තිය
# (මලෙයහ ප්‍රතිපත්ති ප්‍රකාශනය)

## පූර්විකාව

1. ශ්‍රී ලංකාවේ ආර්ථිකයට සහ එහි සාමාන්‍ය යහපැවැත්ම සඳහා ශත වර්ෂ දෙකකට වැඩි කාලයක් මලෙයහ දෙමළ ස්ත්‍රීන් සහ පිරිමින් විසින් ලබා දී ඇති අතිමහත් දායකත්වය තහවුරු කිරීම;

2. පුළුල් ශ්‍රී ලාංකීය අනන්‍යතාවයක් ගොඩනැගීම සඳහා දායක වුවද, ඔවුනටම අනන්‍ය වූ පැහැදිලි අනන්‍යතාවයක් සහිත ප්‍රජා කොට්ඨාශයක් ලෙස එකී ප්‍රජාවගේ අයිතිවාසිකම් සහ අභිමානය පූර්ණ ලෙස භුක්ති විඳින, සෑම අයුරින්ම සමාන පුරවැසියන් ලෙස සැලකිල්ලට භාජනය වීම සඳහා ඔවුන්ට ඇති අයිතිය අනුමත කිරීම;

3. නිදහසින් පසු සැලකිය යුතු කාලයක් පුරා එකී ප්‍රජාව පුරවැසිභාවය, සංවර්ධනය සඳහා වූ අවස්ථා මෙන්ම දේශපාලන නියෝජනය අහිමි වූ ප්‍රජාවක් ලෙස සිටි බවත්, එහි ප්‍රතිඵලයක් ලෙස අනෙකුත් ප්‍රජාවන් හා සසඳන විට බොහෝ සමාජ-ආර්ථික හා මානව සංවර්ධන දර්ශකවලින් පසුගාමී තත්වයකට පත්ව ඇති බවත් පිළිගැනීම; සහ

4. මලෙයහ දෙමළ ප්‍රජාවගේ සමාජ-ආර්ථික තත්ත්වයන්හි කිසියම් දියුණුවක් ඇතිවන්නේ නම් එය සමස්ත ශ්‍රී ලංකාවේ ආර්ථික සංවර්ධනය සහ මානව සංවර්ධනය කෙරෙහි ධනාත්මක සහ සැලකිය යුතු දායකත්වයක් සපයන බව පිළිගැනීම.

## මෙහෙයවීමේ මූලධර්ම

1. මලෙයහ ප්‍රජාව ශ්‍රී ලංකාවේ දේශපාලන, පරිපාලන, ආර්ථික සහ සමාජ ප්‍රවාහයේ මුළුමනින්ම ඒකාබද්ධ වූ පාර්ශ්වයක් බව තහවුරු වන අයුරින් එකී ප්‍රජාවගේ අභිලාෂයන් පිළිගැනීම සහ ඒවාට සහාය දීම;

2. මෙම ප්‍රජාව දිවයිනේ සෑම ප්‍රදේශයකම විසිරුණු ආකාරයෙන් ජීවත් වන බව සහ නුවරඑළිය දිස්ත්‍රික්කයේ සංකේන්ද්‍රිතව ජීවත් වන බව සැලකීම;

3. මෙම ප්‍රජාවේ තරුණ ජනගහනයෙන් සැලකිය යුතු පිරිසක් නව අවස්ථා සොයන බැවින් මෙකී ප්‍රජාව පරිවර්තන අවධියක පසු වන බව සැලකිල්ලට ගැනීම;

4. අ. වඩාත් හොඳින් අර්ථ නිරූපනය කරන ලද ස්ථිර ක්‍රියාමාර්ග ඇතුළුව ගත යුතු ඉලක්කගත ක්‍රියාමාර්ග; (Affirmative Action).

   ආ. මලෙයහ දෙමළ ප්‍රජාවගේ ඉඩම් හිමිකම් පිළිබඳ ගැටලුව විසඳීම;

   ඇ. රජයේ සේවාවන් වෙත සාධාරණ ප්‍රවේශය සහ එකී සේවාවන් ලබා ගැනීම සඳහා වැව්ලි සමාගම් මත යැපීමට සිදු නොවීම;

   ඈ. අධ්‍යාපනය සහ වෘත්තීය හැකියාවන් සඳහා ආයෝජනය කිරීම;

   යනාදි ගති ලක්ෂණ සහිත අර්ථාන්විත ඒකාබද්ධතාවයක් අවශ්‍ය බව හඳුනා ගැනීම.

පහත සඳහන් කරුණු සඳහා මෙයින් අපි එකඟත්වය ප්‍රකාශ කර සිටිමු;

**(අ) අධ්‍යාපනය සහ වෘත්තීය පුහුණුව සඳහා අවස්ථා සැලසීම තුළින් - මලෙයහ තරුණ තරුණියන් සන්නද්ධ කිරීමෙන් අනාගතය සඳහා ඉදිරි පිම්මක්**

1. ද්විතීයික සහ තෘතීයික මට්ටම්වල අධ්‍යාපන සාධනයේදී ජාතික සාමාන්‍යයන් සමඟ මලෙයහ ප්‍රජාව සමාන තලයකට ගෙන ඒම සඳහා සාධනීය ක්‍රියාකාරී වැඩසටහනක් ක්‍රියාත්මක කිරීම. මෙය රාජ්‍ය ප්‍රතිපත්තියකින් සහ බහුපාර්ශ්වික සහය ඇතුළු ක්ෂේත්‍රයේ පෙර මැදිහත්වීම් මගින් පෝෂණය වූ ක්‍රියාකාරී සැලැස්මක් ඔස්සේ සාක්ෂාත් කරගත යුතුය.

2. නුවරඑළිය, මහනුවර, මාතලේ, බදුල්ල, මොණරාගල, කෑගල්ල, රත්නපුර, කළුතර, ගාල්ල, කුරුණෑගල සහ කොළඹ දිස්ත්‍රික්කයේ අවිස්සාවේල්ල කලාපයේ විද්‍යා, ගණිත හා තාක්ෂණ විෂය ධාරාවන් සහිත ජාතික පාසල් 25ක් තෝරාගෙන උසස් කිරීම සහ අවශ්‍ය අවස්ථාවන්හි එවන් පාසල් ස්ථාපිත කිරීම.

3. දැනටමත් ගෙන ඇති කැබිනට් තීරණය අනුව සහ පාර්ලිමේන්තු සංසදය විසින් එළඹ ඇති තීරණවලට අනුව අවශ්‍ය ඉඩම් වෙන්කරමින් වතුකරයේ සියලුම පාසල්වල ක්‍රීඩා පිටි ඇතුළු යටිතල පහසුකම් වැඩිදියුණු කිරීම. වතුකරයේ සෑම පාසලක් සඳහාම ක්‍රීඩා පිටි ඇතුළුව වෙනත් අවශ්‍යතා සඳහා අවශ්‍ය වන ඉඩම් පිළිබඳ මැනුම් කටයුතු වහාම සිදුකර එයට අදාල  මායිම් නිශ්චය කොට නිරවුල් හිමිකම් ලබාදීම.

4. මලෙයහ දෙමළ ප්‍රජාවේ සුවිශේෂී අවශ්‍යතා සඳහාම වෙන්වූ  අයුරින් දෙමළ මාධ්‍යයෙන් විද්‍යාව, තාක්ෂණය, ඉංග්‍රීසි, ගණිතය යන විෂයයන් (STEM) සඳහා ගුරුවරුන් පුහුණු කිරීම සඳහා අංග සම්පූර්ණ අතිරේක අධ්‍යාපන විද්‍යා පීඨයක් ස්ථාපිත කිරීම. පාසල්වල පවතින ගුරු පුරප්පාඩු සඳහා ප්‍රමිතීන්ට අනුකූලව සුදුසු අයදුම්කරුවන්ගෙන් මෙකී පුරප්පාඩු පිරවීමටත් අන්තර්කාලීන ක්‍රියාමාර්ග යක් ලෙස මෙකී පුරප්පාඩු සඳහා බාහිරින් සුදුසු අයදුම්කරුවන් තෝරා පත් කර ගැනීම සඳහා විශේෂ වැඩපිළිවෙළක් සම්පාදනය කිරීමටත් කැපවීම.

5. වතුකරයේ මුල් ළමාවිය අධ්‍යාපනය විධිමත් කිරීමට සහ අනුග්‍රහය දැක්වීමට පියවර ගැනීම සහ පෙර පාසල් සහ ප්‍රාථමික මට්ටමේ සිසුන් සඳහා පාසල් පෝෂණ වැඩසටහන් ක්‍රියාත්මක කිරීම.

6. යුනෙස්කෝ මාර්ගෝපදේශයන්ට අනුව වතුකරයේ දෙමළ දරුවන්ට තම මව් බසෙන් ඉගෙනීමට හැකි වන අයුරින් ඔවුන් ජීවත් වන ස්ථානයට ආසන්නයේ පිහිටා ඇති දෙමළ මාධ්‍ය පාසල්වලට ඇතුළුවීමට ඉඩ ප්‍රස්ථාවක් තිබෙන බවට සහතික වීම. රත්නපුර, කෑගල්ල, කළුතර, ගාල්ල, මාතර සහ කුරුණෑගල යන ප්‍රදේශ කෙරෙහි විශේෂ අවධානයක් යොමු කළ යුතුයි.

7. දිළිඳු ළමුන් සඳහා නේවාසිකාගාර පහසුකම් සහිත පාසල් සංවර්ධනය කිරීම සහ අවශ්‍ය අවස්ථාවන්හිදී එවන් පාසල් ස්ථාපිත කිරීමට කටයුතු කිරීම.

8. වතුකරයේ පිහිටා තිබෙන දුෂ්කර පාසල් සඳහා ගුරු නිවාස ඉදිකිරීමට අදාල වන අයුරින් විශේෂ ව්‍යාපෘතියක් ක්‍රියාත්මක කිරීම.

9. වතුකරයේ තොරතුරු තාක්ෂණ යටිතල පහසුකම් වැඩිදියුණු කිරීම සඳහා මෙන්ම  ජාතික හා ජාත්‍යන්තර තාක්ෂණ සේවා සපයන්නන් සමඟ සම්බන්ධ වෙමින් තොරතුරු තාක්ෂණ මධ්‍යස්ථාන සහ සම්පත් මධ්‍යස්ථාන (නව්‍ය අදහස් ශක්‍ය ව්‍යාපාරික යෝජනා බවට පරිවර්තනය කිරීමට ඉඩ සලස්වන ඉන්කියුබේෂන් මධ්‍යස්ථාන) ස්ථාපිත කිරීම සඳහා ද්විපාර්ශ්වික සහ බහු පාර්ශ්වික ක්‍රියාකාරීන් සමඟ සහයෝගීතාවයෙන් කටයුතු කරන බවට සහතික වීම.

10. ශ්‍රී ලංකා හයිලන්ඩ් විශ්වවිද්‍යාලය (HUSL) යන නමින් අංග සම්පූර්ණ විශ්වවිද්‍යාලයක් පිහිටුවීමේ පළමු පියවර ලෙස දැනට ක්‍රියාත්මක වන විශ්වවිද්‍යාලයකට අනුබද්ධිතව හැටන් නගරයේ විශ්වවිද්‍යාලයීය මණ්ඩපයක් පිහිටුවීමට පියවර ගැනීම. මෙකී යෝජිත විශ්වවිද්‍යාලය ආරම්භක ප්‍රයත්නයක් ලෙස මූලික වශයෙන් නවීන හා අපනයන කෘෂිකර්මය, ආහාර තාක්ෂණය, පශු සම්පත් සංවර්ධනය, වැවිලි අධ්‍යයනය, තොරතුරු තාක්ෂණය, ප්‍රමාණ සමීක්ෂණය, අධ්‍යාපනය, භාෂා, මලෙයහ කලා හා සංස්කෘතික අධ්‍යයනය, සංචාරක, ආගන්තුක සත්කාර කළමණාකරණය, ව්‍යාපාර කළමනාකරණය, මූල්‍ය කළමනාකරණය, ස්වභාවික සම්පත් කළමනාකරණය, පරිසර විද්‍යා, මානව ශාස්ත්‍ර සහ සමාජ විද්‍යා ක්ෂේත්‍ර යන විෂය ක්ෂේත්‍ර ඔස්සේ අවම වශයෙන් උපාධි පහක් ප්‍රදානය කිරීමේ වැඩසටහනක් අරමුණු කර ගනිමින් ක්‍රියාත්මක වනු ඇත.

11. මලෙයහ තරුණ තරුණියන්ගේ වෘත්තීය පුහුණුව සඳහා වෙන් වූ පුහුණු ආයතන ස්ථාපිත කිරීම සහ වෘත්තීය පුහුණු ආයතන සහ කාර්මික විද්‍යාලවල ඉල්ලුමට සරිලන අයුරින් දෙමළ මාධ්‍යයෙන් පාඨමාලා හඳුන්වා දීමට කටයුතු කිරීමෙන් සහය ලබා දීම. මලෙයහ තරුණ තරුණියන් මෙකී ආයතනවලට ඇතුළත් කර ගැනීමට හැකි වන අයුරින් ඇතුළත් කර ගැනීමේ නිර්ණායක සැකසෙන බව සහතික වීම සහ දිළිඳු සිසුන්ට පාඨමාලාව සම්පූර්ණ කරන තෙක් විශේෂ මූල්‍ය ආධාර සහ දීමනා ලබා දීම.

12. උපස්ථායක වෘත්තිකයන් ලෙස විශේෂයෙන් කාන්තාවන් ඇතුළුව මලෙයහ තරුණ තරුණියන් පුහුණු කිරීම සඳහාම වෙන් වූ හෙද පුහුණු ආයතනයක් පිහිටුවීම.

13. වෘත්තීය මාර්ගෝපදේශනය, නව ව්‍යාපාර සඳහා මූල්‍ය ප්‍රවේශය, වැවිලි කළමනාකාරිත්වයේ අනුමැතියෙන් තොරව ව්‍යාපාර ලියාපදිංචියට පහසුකම් සැලසීම සහ අලෙවිකරණය සඳහා සහාය වීම යනාදිය තුළින් මලෙයහ තරුණ තරුණියන්ගේ ව්‍යවසායකත්වය සඳහා සහාය වීම.

**(ආ) සෞඛ්‍ය, පෝෂණය සහ සුභසාධන**

1. මේ වන විටත් ගෙන ඇති කැබිනට් තීරණයට අනුව, වතු කළමනාකරණය විසින් පවත්වාගෙන යනු ලබන වතු අංශයේ සියලුම සෞඛ්‍ය පහසුකම්/ආයතන පළාත් සහ ජාතික සෞඛ්‍ය අධිකාරීන් වෙත ඒකාබද්ධ කිරීම.

2. රටේ සෙසු පුරවැසියන්ට හිමිවන සෞඛ්‍ය සේවාවට කිසි ලෙසකින් නොඅඩු මට්ටමකින් මලෙයහ ප්‍රජාවේ ස්ත්‍රී සහ පුරුෂ දෙපාර්ශ්වයම සෞඛ්‍ය සේවාව ලබාගන්නා බවට සහතික වීම සඳහා සුදුසුකම් ලත් විශේෂඥයින් පත් කිරීම.

3. දරුවන් අතර කුරුවීම, ප්‍රජනක වයසේ සිටින කාන්තාවන් අතර රක්තහීනතාවය සහ ජාතික සාමාන්‍යයට වඩා සැලකිය යුතු අයහපත් තත්වයක් පෙන්නුම් කරන වතුකරයේ ළදරු හා මාතෘ මරණ වැනි අනෙකුත් තීරණාත්මක සෞඛ්‍ය දර්ශක උසස් මට්ටමක පවත්වා ගැනීම සඳහා පෝෂණ අතිරේක ඇතුළු ඉලක්කගත ආධාරක වැඩසටහනක් ක්‍රියාත්මක කිරීම.

4. මහජන සෞඛ්‍ය පරීක්ෂක සේවාව වතුකරය තුළ ද නිසි අයුරින් ආවරණය වන පරිදි මෙකී සේවාව ව්‍යාප්ත කිරීමෙන් සහ ඉහළ ජනගහනයක් සහිත වතු ප්‍රදේශ සඳහා නව මහජන සෞඛ්‍ය පරීක්ෂක සේවා කොට්ඨාශ හෝ/ස්ථාන පිහිටුවීම මගින් මහජන සෞඛ්‍ය පරීක්ෂණ (PHI) සේවාවන්හි ඵලදායීතාවය වැඩි දියුණු කිරීම.

5. සංසන්දනාත්මක දරිද්‍රතා ව්‍යාප්තිය සහ අනෙකුත් මානව සංවර්ධන දර්ශකවලට අනුකූලව අස්වැසුම වැනි සමාජ ආරක්ෂණ වැඩසටහන් සහ අනෙකුත් සුබසාධන වැඩසටහන් වෙත ප්‍රවේශ වීමේදී මෙම ප්‍රජාවටද ඒ සඳහා අවකාශය ලබා දීම.

**(ඇ) වතුකරයේ ජීවනෝපාය සහ රැකියාව**

1. තේ කර්මාන්තය ආරක්ෂා කිරීම සඳහා ක්‍රියාත්මක කළ හැකි තිරසාර පිළියමක් ලෙස වතු කම්කරුවන් ඉඩම් හිමි කුඩා වතු හිමියන් බවට පරිවර්තනය කිරීම සඳහා ඉවහල් වන පුළුල් රාජ්‍ය ප්‍රතිපත්තියක් හඳුන්වා දී ක්‍රියාත්මක කිරීම. මෙලෙස ප්‍රතිපත්තියක් හඳුන්වා දීමේදී නුවරඑළිය සහ අනෙකුත් දිස්ත්‍රික්කවල ඉඩම් පරිහරණ රටාවල දැකිය හැකි වෙනස්කම් මෙන්ම වැවිලි වතු ආශ්‍රිත විවිධ භූගෝලීය ප්‍රදේශවල දක්නට ලැබෙන ප්‍රායෝගික තත්වයන් සැලකිල්ලට භාජනය කළ යුතුය.

2. මෙයට සමගාමීව මේ හා සම්බන්ධ පාර්ශ්වකරුවන් විසින් ඉදිරිපත් කරනු ලබන විවිධ විකල්ප යෝජනාවන්හි යෝග්‍යතාවය පිරික්සනු ලබන ජාතික ක්‍රියාකාරී සැලැස්මක් සකස් කිරීම සහ විවිධ දිස්ත්‍රික්කවල මෙම 'කුඩා වතු හිමියන්' බවට පත්කිරීමේ ප්‍රතිපත්තිය ක්‍රියාත්මක කිරීම සඳහා වන ක්‍රමවේදයක් සකස් කිරීම.

3. "කම්කරුවා" යන තත්වයේ සිට "කුඩා වතු හිමියන්" යන තත්වය දක්වා විතැන් වීම සඳහා විකල්ප ආයතනික රාමු ඉදිරිපත් කිරීමේ කාර්යය සඳහා වෙන් වූ වතු සමුපකාර දෙපාර්තමේන්තුවක් පිහිටුවා කුඩා තේ වතු සංවර්ධන අධිකාරියට සම්බන්ධ වීමේ විකල්පය තෝරා ගැනීම සඳහා අවස්ථාවක් ඇති කිරීම.

4. කම්කරුවන් කුඩා වතු හිමියන් බවට පත් කිරීමේ මෙම සංක්‍රාන්ති කාලපරිච්ඡේදය තුළ රජය විසින් සපයන සක්‍රිය සේවා තුළින් මෙන්ම පාර්ශ්වකරුවන්ගේ ගිවිසුම් හරහා යහපත් ජීවන වැටුපක් සහතික කිරීම.

5. තේ වගාව, සත්ත්ව පාලනය සහ අනෙකුත් ව්‍යවසායකත්ව කටයුතුවලට ප්‍රමුඛත්වය දෙමින් ජීවනෝපාය කාර්යයන් සඳහා ගෙවතු වගා සංවර්ධන (Homestead Development) කටයුතු සිදු කිරීමට ඉඩ සලසනු වස් මෙම වතුවල පදිංචිකරුවන්ට එක් එක් වතුයායේ රජයේ ඉඩම් නැවත පවරාගෙන සහ අතහැර දැමූ හා වගා නොකළ ඉඩම් බෙදා හැරීම.

6. ජාතික ආහාර සුරක්ෂිතතාවයට දායක වන වතුවල පදිංචිකරුවන් විසින් දැනටමත් දීර්ඝ කාලයක් තිස්සේ වගා කරන ඉඩම් සඳහා නිරවුල් ඉඩම් හිමිකම් ලබා දීම සහ විධිමත් කිරීම.

7. මලෙයහ දෙමළ නියෝජනය බරපතල ලෙස අඩු මට්ටමකින් පවතින අර්ධ රාජ්‍ය ආයතන ඇතුළු රාජ්‍ය අංශයේ ආයතනවලට බඳවා ගැනීම් සිදුකිරීමේ දී මලෙයහ ප්‍රජාවේ තරුණ තරුණියන්ට ප්‍රමුඛත්වය ලබා දීම. මෙහි දී ලැබෙන රැකියා ප්‍රමාණය ඔවුන් සේවය කරන ජනගහනයට සමානුපාතික බව සහතික වන අයුරින් නිශ්චිත කාල පරාසයක් සහිත සාධනීය ක්‍රියාකාරී වැඩසටහනක් ඔස්සේ මෙය සාක්ෂාත් කරගැනීමට වග බලා ගත යුතුය. මලෙයහ තරුණ තරුණියන්ට මෙම අවස්ථාවෙන් ප්‍රයෝජනයක් ලබාගත හැකි අයුරින් විශේෂ නිර්ණායක මෙම වැඩසටහනට ඇතුළත් විය යුතුය.

8. පුද්ගලික වතු ඇතුළු වතුකරයේ සෙසු රැකියා ස්ථානයන්හි රැකියා කොන්දේසි සහ සේවා ස්ථානවල ආරක්ෂාව නියාමනය කරන කම්කරු නීති සහ අනෙකුත් නීති පිළිපදින ආකාරය අධීක්ෂණයට ලක්කිරීමේ කාර්යය ශක්තිමත් කිරීම සඳහා කම්කරු දෙපාර්තමේන්තුව මගින් විශේෂ වැඩසටහනක් හඳුන්වා දීම. එමෙන්ම, වතුකරයේ සේවය කිරීම සඳහා දෙමළ භාෂා කතා කරන කම්කරු පරීක්ෂකවරුන් පත් කිරීම.

**(ඇ) නව ගම්මානවල නිවාස ඉදිකිරීම සඳහා ඉඩම්**

1. වතුවල පදිංචි සෑම පවුලකටම නිවසක් සාදා ගැනීම සඳහා ලබා දෙනු ලබන ඉඩම් කැබැලිවලට නිරවුල් ඉඩම් හිමකමක් ලැබෙන බවට සහතික වීම සඳහා අවශ්‍ය නීතිමය සහ පරිපාලන ක්‍රියාමාර්ග ගැනීම. ඉඩම් කට්ටි තෝරා ගැනීමේ දී එය සහභාගීත්ව ක්‍රමවේදයක් ඔස්සේ සිදු කළ යුතු අතර ඉඩමට ඉතා සමීප ප්‍රවේශ මාර්ගයට පහසුවෙන් ළඟා විය හැකි භූගෝලීය ප්‍රදේශයක මෙම ඉඩම් කැබලි පිහිටා තිබිය යුතුය. එම පවුල්වලට ඔවුන් මේවන විට ජීවත් වන ස්ථානයේම රැඳී සිටීම හෝ නිවසක් තනා ගැනීම සඳහා නව ඉඩමක් ලබා ගැනීම යන විකල්ප දෙකෙන් එකක් තෝරා ගැනීම සඳහා අයිතියක් තිබිය යුතුය. පවුලක් සඳහා එසේ ලබා දෙනු ලබන ඉඩමේ විශාලත්වය අවම වශයෙන් එම ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාශයේ අනෙකුත් පවුල්වලට ලබා දෙන ලබන ඉඩමේ විශාලත්වයට සමාන විය යුතුය. එකී ඉඩම් සඳහා ලබා දෙනු ලබන හිමිකම් ඔප්පුවේ නීත්‍යානුකූල තත්වය රටේ අනෙකුත් ප්‍රදේශවල ගම්වැසියන්ට ලබා දෙන ඉඩම්වල හිමිකට ඇති නීත්‍යානුකූල තත්ත්වයට සමාන විය යුතුය. මෙහිදී, පවුලක/ගෘහයක ස්වාමිපුරුෂයා සහ භාර්යාවට හවුල් හිමිකාරීත්වය ලබා දිය යුතුය. සෑම විවාහක යුවළක්ම තනි පවුල් ඒකකයක් ලෙස පිළිගත යුතු අතර සෑම පවුලකටම නිවසක් තනා ගැනීම සඳහා ඉඩම් කැබැල්ලක් ලබාගැනීමට හිමිකමක් ඇති බව පිළිගත යුතුය.

2. තමන්ගේ පුද්ගලික වියදමින් මෙකී ඉඩම්වල තමන්ගේ නිවස ඉදිකර ගැනීමට කැමැත්තක් දක්වන අයවළුන්ට ප්‍රමුඛතා පදනම මත පරිපාලනමය සහාය ලබා දීම.

3. නිවසක් තනා ගැනීම සඳහා මුදල් ආධාර අවශ්‍ය වන ඉතා දිළිඳු මලෙයහ පවුල්, රජය විසින් මූල්‍ය ප්‍රතිපාදන ලබා දෙනු ලබන නිවාස ව්‍යාපෘතිවලට ඇතුලත් කර ගැනීම. මලෙයහ දෙමළ ප්‍රජාවට නිවාස සහ යටිතල පහසුකම් ගොඩනැගීම සඳහා ද්විපාර්ශ්වික සහ බහුපාර්ශ්වික සංවර්ධන ආධාර ලබාගැනීම සඳහා රජය සක්‍රිය මැදිහත්වීමක් සිදු කළ යුතුය.

4. පසුගිය දශක තුන තුළ රජයේ විවිධ යෝජනා ක්‍රම යටතේ දැනටමත් ඉදිකර ඇති නිවාසවලට අදාල හිමිකම් ඔප්පු විධිමත් කිරීම සහ ලබා දීම.

5. පානීය ජලය සහ සනීපාරක්ෂක පහසුකම් ලබා දීමට අදාල ජාතික සාමාන්‍යයට අනුව වතුකරයේ ප්‍රජාවටද එම පහසුකම් ඒ ආකාරයෙන්ම ලැබීමේ තත්වය උදා කර දීමේ ඉලක්කයක් සහිතව රජය විසින් මෙහෙයවනු ලබන ජල සම්පාදන හා සනීපාරක්ෂක පහසුකම් ව්‍යාපෘතියක් ක්‍රියාත්මක කිරීම.

6. අවශ්‍ය භෞතික හා සමාජයීය පහසුකම් සහිත නව ගම්මාන ලෙස වතුකරයේ ජනාවාස ඇති කිරීම. නව ගම්මාන සංවර්ධන අධිකාරියට (NEVIDA) වතු ආශ්‍රිතව නගර සහ නව ගම්මාන නිර්මාණය කිරීමේ තම වගකීම ඉටු කිරීම සඳහා අවශ්‍ය සම්පත් සහ බලතල ප්‍රමාණවත් අයුරින් ලබා දීම.

**(ඉ) පළාත්වලින් නාගරික ප්‍රදේශ වෙත සංක්‍රමණය වන දෙමළ ජනතාව සඳහා සහාය වන ආධාරක ව්‍යුහයක් ඇති කිරීම**

1. මෙම නාගරික ප්‍රදේශවලට සංක්‍රමණය වී අඩු ආදායම් ලබන තත්වයෙන් ඒකරාශී වන මලෙයහ තරුණ තරුණියන්ට වෘත්තීය මාර්ගෝපදේශනය, වෘත්තීය පුහුණුව, තොරතුරු තාක්ෂණ, ඉංග්‍රීසි සහ මෘදු කුසලතා පුහුණුව, සංස්කෘතික සුපෝෂණය සහ නීති උපදේශනය සැපයීම සඳහා වෙන් වූ ප්‍රජා සම්පත් මධ්‍යස්ථාන පිහිටුවීම.

2. මෙම නාගරික ප්‍රදේශවල ඉතා අඩු පහසුකම් සහිත නිවාසවල සහ කුලියට ගත් නිවාසවල ජීවත් වන සංක්‍රමණික පවුල් නාගරික දුප්පතුන් සඳහා වන අඩු ආදායම්ලාභී නිවාස වැඩසටහන් ඇතුළු සමාජ ආරක්ෂණ ජාල වැඩසටහන්වලට ඒකාබද්ධ කිරීම හා එමගින් ඔවුන් වත්මන් දුගී තත්වයෙන් මුදවා ගැනීමට කටයුතු කිරීම.

3. ගෘහ සේවය නියාමනය කිරීම සඳහා නීතියක් සම්පාදනය කිරීම, රැකියා ස්ථානයේ ආරක්ෂාව සහ සේවා ස්ථානවල සිදුවන හිරිහැර පිළිබඳ ILO සම්මුතීන් අපරානුමත කිරීම සහ මෙම අංශයේ සේවය කරන දහස් ගණන් අවිධිමත් සේවකයින් ආරක්ෂා කිරීම.

4. මෙම පවුල්වල දරුවන්ට අධ්‍යාපනය ලබා දෙන නාගරික ප්‍රදේශවල පිහිටා තිබෙන දෙමළ මාධ්‍ය පාසල්වල යටිතල පහසුකම් වැඩිදියුණු කිරීම සහ මානව සම්පත් අවශ්‍යතා සපුරාලීම.

5. කොළඹ සහ ගම්පහ දිස්ත්‍රික්ක ඇතුළු නාගරික ප්‍රදේශවල ස්ථිර පදිංචිකරුවන් බවට පත්වන අය නීත්‍යානුකූල ඡන්ද හිමි නාම ලේඛණයේ ලියාපදිංචි කිරීමේ ක්‍රියාවලියේදී මුහුණ දෙන පරිපාලන ගැටලු විසඳීම.

**(ඊ) මලෙයහ දෙමළ ප්‍රජාව රාජ්‍ය පරිපාලන ව්‍යුහයට සහ ජාතික ප්‍රධාන ප්‍රවාහයට අන්තර්ග්‍රහණය කර ගැනීම**

1. නව සීමා නිර්ණය කිරීම් මගින් වතුකරයේ ග්‍රාම නිලධාරි වසම් සහ ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාස සංඛ්‍යාව වැඩි කිරීම. කඳුකර ප්‍රදේශයේ දක්නට ලැබෙන ප්‍රවාහන දුෂ්කරතා සැලකිල්ලට භාජනය කරමින් ජාතික මධ්‍යන්‍ය සීමාවට වඩා අඩු ජනගහනයක් සහ භූගෝලීය සීමාවක් නිර්ණය කිරීම මගින් සෑම කොට්ඨාශයක්ම ජාතික මධ්‍යන්‍යට වඩා අඩු භූමි ප්‍රදේශයකින් සමන්විත විය යුතුය.

2. දැනටමත් පිහිටුවා ඇති නුවරඑළිය දිස්ත්‍රික්කයේ නව ප්‍රාදේශීය ලේකම් කාර්යාල මුළුමනින්ම සක්‍රිය ලෙස ක්‍රියාත්මක වීම සඳහා ප්‍රමාණවත් සම්පත් වෙන් කිරීම.

3. වතු හාම්පුතුන්ට බැඳ තබා ඇති කම්කරුවන්ගේ තත්වය පූර්ණ පුරවැසියන්ගේ තත්වය දක්වා පරිවර්තනය වීමට හැකිවන පරිදි ග්‍රාමීය, ප්‍රාදේශීය සහ දිස්ත්‍රික් මට්ටමින් රාජ්‍ය ආයතනවලට විමධ්‍යගත කර ඇති රාජ්‍ය පරිපාලනය සහ සුබසාධන සේවාවන් වෙත සාධාරණ ප්‍රවේශයක් සහතික කිරීම.

4. වතු ආශ්‍රිත මාර්ග ජාලය පළාත් පාලන, පළාත් සභා සහ මධ්‍යම රජයේ අමාත්‍යාංශයේ විෂය පථය තුළට ගෙන ඒම සහ ඒවායේ විධිමත් නඩත්තුව සහ වැඩිදියුණු කිරීම් සඳහා ජාතික ප්‍රවාහයට ඒකාබද්ධ කිරීම.

**(උ) මලෙයහ දෙමළ ප්‍රජාව ආණ්ඩුකරණයේදී හවුල්කරුවන් බවට පත් කිරීම**

1. දිවයිනේ බොහෝ ප්‍රදේශවල විසිරුණු ආකාරයෙන්ද නුවරඑළිය දිස්ත්‍රික්කයේ වැඩි වශයෙන් සංකේන්ද්‍රණය වෙමින්ද ජීවත් වන මලෙයහ දෙමළ ප්‍රජාව සඳහා මධ්‍යයේ සහ පරිධියේ බලය බෙදා දීම සහතික කිරීම. මෙයින් අදහස් කරන්නේ ජාතික මට්ටමින් බලය බෙදාදීම සඳහා අදාල වන විධිවිධාන මෙන්ම පළාත් මට්ටමින් 13 වැනි සංශෝධනය ක්‍රියාත්මක කිරීම සහ පළාත් පාලන මට්ටමින් ව්‍යවස්ථාපිත ව පිළිගත් ආකාරයෙන් බලය බෙදා හැරීමයි.

2. මලෙයහ දෙමළ ප්‍රජාව විසිරී ජීවත්වන ජනගහන රටාව සැලකිල්ලට ගනිමින් ව්‍යවස්ථා ප්‍රතිසංස්කරණ ක්‍රියාවලියක් තුළින් පාලන ආයතනයක් ලෙස භෞමික නොවන ප්‍රජා සභාවක් (NTCC) ස්ථාපිත කිරීම. මෙම විසිරී ජීවත්වන ප්‍රජාවේ අවශ්‍යතා සොයා බැලීමට මෙම ආයතනයට බලයක් හිමි විය යුතුය. පාර්ලිමේන්තුවට සහ පළාත් සභාවලට තේරී පත් වූ මලෙයහ සම්භවයක් ඇති නියෝජිතයින් සහ මලෙයහ සම්භවයක් ඇති පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරුන් සහ පළාත් සභා මන්ත්‍රීවරුන් නොමැති සංදර්භයකදී අදාල ප්‍රාදේශීය සභා මන්ත්‍රීවරුන් මෙම සභාවේ සාමාජිකයන් ලෙස කටයුතු කරනු ඇත. මෙම ආයතනයට සංවර්ධන වැඩසටහන්වල නියැළීමටත් මලෙයහ දෙමළ ප්‍රජාවගේ සංස්කෘතික, සමාජයීය, ආර්ථික සහ

දේශපාලනික ජීවිතයට බලපෑමක් එල්ල කිරීමට හැකියාවක් ඇති නීති සහ රෙගුලාසි පාර්ලිමේන්තු, පළාත් සභා සහ පළාත් පාලන ආයතන වෙත ඉදිරිපත් කෙරෙන විටදී ඒවා අධීක්ෂණය සහ විමර්ශනය කිරීමට හැකි වන අයුරින් උපදේශන සහ විධායක හැකියාවක් තිබිය යුතුය.

3. කඳුකර ප්‍රදේශයේ ප්‍රවාහන අපහසුතා සහ එක් එක් ප්‍රාදේශීය සභා බලප්‍රදේශයේ භූගෝලීය ව්‍යාප්තිය සැලකිල්ලට ගනිමින් නව සීමා නිර්ණය කිරීම් මගින් සාමාන්‍ය ජාතික ප්‍රමාණයේ සාමාන්‍යයට වඩා අඩු අගයක් සහිතව වතුකරයේ ප්‍රාදේශීය සභා සංඛ්‍යාව වැඩි කිරීම.

4. වතුකරයේ තෝරාගත් ප්‍රාදේශීය සභා නගර සභා ලෙසත් නගර සභා මහ නගර සභා ලෙසත් උත්ශ්‍රේණිගත කිරීම.

5. නෛතික අවශ්‍යතාවයක් වන ත්‍රෛභාෂා ප්‍රතිපත්තිය ක්‍රියාත්මක කිරීම. දෙමළ භාෂාව කතා කරන කාර්ය මණ්ඩලය සහ පරිවර්තකයන් පත් කිරීම මගින් ප්‍රජාවන්ට තම රජයේ නිලධාරීන් සමඟ දෙමළ භාෂාවෙන් ගනුදෙනු කිරීමට හැකි පරිසරයක් උදා කර ඇති බවට සහතික විය යුතුය. ශ්‍රී ලංකාවේ වත්මන් ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 4 වන පරිච්ඡේදය යටතේ නිශ්චිත කොට සඳහන් කර ඇති පරිදි ද්විභාෂා කොට්ඨාශ තුළ මෙම ක්‍රියාමාර්ග දැඩි ලෙස ක්‍රියාත්මක කිරීම.

6. පාර්ලිමේන්තු, පළාත් සභා සහ පළාත් පාලන මට්ටමින් සැබෑ ලෙසම සමානුපාතික මැතිවරණ ක්‍රමයක් පවත්වාගෙන යාම. මලෙයහ දෙමළ ප්‍රජාවට ඔවුන්ගේ ජනගහන ප්‍රතිශතයට සරිලන දේශපාලන නියෝජනයක් සහතික කෙරෙන සීමා නිර්ණ ක්‍රියාවලියක් ක්‍රියාත්මක කිරීම.

7. ව්‍යවස්ථාදායක සභාව, ස්වාධීන කොමිෂන් සභා සහ වෙනත් එවැනි යාන්ත්‍රණ ඇතුළු ජාතික ආයතනවල මලෙයහ දෙමළ නියෝජනය ඇති බවට සහතික වීම.

8. මලෙයහ ප්‍රජාවගේ අයිතිවාසිකම් සහ යහපැවැත්ම වැඩිදියුණු කිරීම සඳහා පිහිටුවා ඇති NEVIDA වැනි ආයතන සඳහා ප්‍රමාණවත් සම්පත් ලබා දීම.

**අත්සන් කළේ,**

**ගරු. සජිත් ප්‍රේමදාස, පා.ම.**
සමගි ජන බලවේගය සහ සමගි ජන සන්ධානය - නායක
විපක්ෂ නායක
ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව

**ගරු. මනෝ ගනේෂන් පා.ම.**
දෙමළ ප්‍රගතිශීලී සන්ධාන (TPA) - නායක
ප්‍රජාතන්ත්‍රවාදී ජනතා පෙරමුණ (DPF) - නායක

**ගරු. පී. දිගාම්බරම්, පා.ම.**
කම්කරු ජාතික පෙරමුණ (WNF) - සභාපති
දෙමළ ප්‍රගතිශීලී සන්ධාන (TPA) - නියෝජ්‍ය නායක

**ගරු. වී. රාධාක්‍රිෂ්ණන්, පා.ම.**
කඳුරට ජනතා පෙරමුණ (UPF) - සභාපති
දෙමළ ප්‍රගතිශීලී සන්ධාන (TPA) - නියෝජ්‍ය නායක

**ගරු. එම්. උදයකුමාර්, පා.ම.**
කම්කරු ජාතික පෙරමුණ (WNF) - උප සභාපති